உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# உ. வே. சா. எனும் தமிழ்த்தாத்தா

கவிஞர் சு. கோபலகிருஷ்ணன்

உத்தமதான புரத்தில் இருந்து
உத்தமதாம் உவேச பிறந்தார்;
சத்திய வீரதம் போலிருந்து
தமிழ்நூல்கள் தேடித் தேடி,
சீவக சிந்தாமணி மணிமேகலை,
சிலப்பதிகாரம், மதுரைக்காஞ்சி,
புறநானூறு முல்லைப்பாட்டு
பட்டினப்பாலை பத்துப்பாட்டு
குறுந்தொகை பெருங்கதை
தமிழ்விடுதூது மான்விடுதூது
அழகர் கிள்ளை விடுதூது
புகையிலை விடுதூது எனும் நூல்களும்,
மதுரை சொக்கர் மும்மணிக்கோவை
யழனி இரட்டை மணிமாலை

நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு,
நல்லூர்க் கோவை, பரிபாடல் எனத்
தொண்ணூறுக்கும் மேற்பட்ட சுவடிகளைத்
தொண்டுள்ளமுடன் தேடித் தந்து
புதுப்பிக்கவும் செய்த புண்ணியவான்;
பூந்தமிழுக்கு அணிசெய்த பொற்கொல்லன்;
கண்ணிறைந்த தமிழ்த் தாத்தா போல
காசினியில் யாரும் கண்டதுண்டா?

((((((()))))))